# நமது தின கனி

காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI

Daily Morning

| Vol: 01 | Issue: 307 | 4 Pages | 9.4.2024 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 307 | 4 பக்கங்கள் | 9.4.2024 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## டென்மார்க் பிரதமர் மீது திடீரென மர்ம நபர் தாக்கியதால் பரபரப்பு



டென்மார்க், ஜூன் 9

டென்மார்க் பிரதமராக மேட் ஃப்ரெடெரிக்சன் இருந்து வருகிறார். இவர் டென்மார்க்கின் மத்திய கோபென்ஹாகென்னில் சென்றபோது நபர் ஒருவரால் தாக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வெள்ளிக்கிழமை (நேற்று) மாலை குல்டோர்வெட் சதுக்கத்தில் நடந்து சென்றபோது நபர் ஒருவரால் தாக்கப்பட்டார். உடனே அந்த நபர் கைது செய்யப்பட்டார். இந்த சம்பவத்தால் பிரதமர் மேட் ஃப்ரெடெரிக்சன் அதிர்ச்சி அடைந்துள்ளார் என பிரதமர் அலுவலம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக டென்மார்க் போலீஸ், பிரதமரை தாக்கிய நபரை கைது செய்துள்ளோம். விசாரணை நடைபெற்று வருகிறது எனத் தெரிவித்துள்ளது. மேற்கொண்டு எந்த தகவலையும் தெரிவிக்கவில்லை.

இந்த சம்பவத்தில் பிரதமர் சற்று அழுத்தத்துடன் இருந்தார். பின்னர் பாதுகாப்பு வளையத்துடன் அந்த இடத்தில் இருந்து வெளியேறினார் எனவும் போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய யூனியன் தேர்தல் டென்மார்க்கில் இன்னும் இரண்டு நாட்களில் நடைபெற இருக்கிறது. அதற்கு முன்னதாக இந்த தாக்குதல் சம்பவம் நடைபெற்றுள்ளது.

மூன்று வாரங்களுக்கு முன்னதாக ஸ்லோவாகிய பிரதமர் ராபர்ட் ஃபிகோ தாக்கப்பட்டார். படுகாயம் அடைந்த அவர், தீவிர சிகிச்சைக்குப்பின் உயிர் பிழைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சுப்ரீம் கோர்ட்டில் கெஜ்ரிவாலின் இடைக்கால ஜாமினை உதாரணம் காட்டிய இம்ரான்கான்



இஸ்லாமாபாத், ஜூன் 9

பாகிஸ்தான் முன்னாள் பிரதம மந்திரியான இம்ரான்கான் பல்வேறு வழக்குகளில் கைது செய்து, சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், வழக்கு ஒன்றுக்காக சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு முன் இன்று இம்ரான்கான் ஆஜரானார்.

அப்போது ஒரு நீதிபதி, லட்சக்கணக்கான ஆதரவாளர்களுடன் கட்சித்தலைவராக உள்ள இம்ரான்கான் சிறையில் அடைக்கப்பட்டுள்ளது வருத்தத்திற்கு உரியது என்றார்.

இந்நிலையில், நீதிபதிகள் முன் இம்ரான்கான் பேசுகையில், இந்தியாவில் பொதுத்தேர்தலில் பிரசாரம் செய்வதற்காக சிறையில் இருந்த டெல்லி முதல் மந்திரி கெஜ்ரிவாலுக்கு இந்திய சுப்ரீம் கோர்ட் இடைக்கால ஜாமின் வழங்கியது. பாகிஸ்தானில் நான் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படுகிறேன். தேர்தலில் நான் நிற்பதற்கு தடை விதிக்கும் வகையில் தேர்தல் நடந்த பிப்ரவரி 8ம் தேதிக்கு 5 நாள் முன்பு எனக்கு தண்டனை வழங்கப்படுகிறது. நவாஸ் ஷெரீப் சிறையில் இருந்தபோது அவருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்கும், தற்போது எனக்கு வழங்கப்படும் வசதிகளையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என தெரிவித்தார்.

## ரஷியாவில் சோகம்: ஆற்றில் மூழ்கி இந்திய மாணவர்கள் 4 பேர் பலி

மாஸ்கோ, ஜூன் 9

ரஷியாவில் மருத்துவம் பயின்று வந்த 4 இந்திய மாணவர்கள் செயிண்ட் பீட்டர்ஸ்பெர்க் அருகே அமைந்துள்ள ஆற்றில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். அவர்களது உடல்களை மீட்டு உறவினர்களிடம் ஒப்படைக்க ரஷிய நாட்டு அதிகாரிகளுடன் இணைந்து, இந்திய தூதரக அதிகாரிகள் பணியாற்றி வருகின்றனர். விசாரணையில், மகாராஷ்டிராவைச் சேர்ந்த ஹர்ஷல் அனந்தராவ் டேசலே, ஜிஷான் அஷ்பக் பின்ஜரி, ஜியா பிரோஜ் பின்ஜரி மற்றும் மாலிக் குல்ம்கோஸ் முகம்மது யாகூப் ஆகிய 4 மாணவர்களும் ரஷியாவின் நோவ்கோரோட் பல்கலைக்கழகத்தில் மருத்துவம் பயின்று வந்தது தெரியவந்துள்ளது. இதுதொடர்பாக, மாஸ்கோவில் உள்ள இந்திய தூதகரம் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், உயிரிழந்த மாணவர்களின் உடல்களை அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கும் வகையில் பணியாற்றி வருகிறோம். அவர்களைப் பிரிந்துள்ள குடும்பத்துக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவர்களுக்கு வேண்டிய அனைத்து உதவியையும் வழங்குவோம். பத்திரமாக மீட்கப்பட்ட மாணவருக்கு முறையாக மருத்துவ சிகிச்சை அளிக்கப்படும் என தெரிவித்துள்ளது.

## காசா போர் நிறுத்தம் குறித்து ஹமாஸ் பதில் அளிக்கவில்லை

காசா, ஜூன் 9

பாலஸ்தீனத்தின் ஹமாஸ் கட்டுப்பாட்டில் உள்ள காசா மீது இஸ்ரேல் படையினர் நடத்தி வரும் தாக்குதலில் உயிர் இழந்தவர்கள் எண்ணிக்கை 36 ஆயிரத்தை தாண்டி விட்டது. இந்த சண்டையில் அப்பாவி பெண்கள், குழந்தைகள் பலியாகி வருவதால் போரை உடனே நிறுத்தவேண்டும் என அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இஸ்ரேலை வலியுறுத்தி வருகின்றன. ஆனால் ஹமாஸ் அமைப்பினர் பிடித்து வைத்துள்ள பிணைக்கைதிகளை விடுவிக்கும் வரை போர் தொடரும் என்றும் ஹமாசை முற்றிலும் ஒழிக்கும் வரை ஓயமாட்டோம் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு அறிவித்துள்ளார். இதனால் இந்த போரை நிறுத்த கத்தார் உள்ளிட்ட நாடுகள் சமரச பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு வருகிறது. கடந்த சில மாதங்களாக தொடர்ந்து நடந்து வரும் இந்த பேச்சு வார்த்தையில் எந்த முடிவும் எட்டப்படவில்லை. எகிப்து வெளியுறவு துறை மந்திரி சமே ஷோத்ரி கெய்ரோவில் அமெரிக்க உயர் மட்ட பிரதிநிதிகளுடன் காசா போர் குறித்து பேச்சு வார்த்தை நடத்தினார். இந்தநிலையில் இஸ்ரேலுடன் போர் நிறுத்தம் மற்றும் பிணைக்கைதிகளை விடுவிப்பது தொடர்பாக ஹமாஸ் அமைப்பினர் இது வரை எந்தவித பதிலும் அளிக்கவில்லை என கத்தார் வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் மஜித் அல் அன்சாரி தெரிவித்துள்ளார். இருந்த போதிலும் தொடர்ந்து சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறது.

# நீட்டை ஒழித்துக்கட்டும் நாள் வெகுதொலைவில் இல்லை... முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி

சென்னை, ஜூன் 9

நடந்து முடிந்த நீட் நுழைவுத் தேர்வில் முறைகேடு நடந்திருப்பதாக குற்றம்சாட்டி, தேர்வை ரத்து செய்யக்கோரி மாணவர்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

இந்நிலையில், தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

சமீபத்திய நீட் தேர்வு முடிவுகள் தொடர்பாக வெளிவரும் செய்திகள் அத்தேர்வுக்கு எதிரான நமது கொள்கை நிலைப்பாடு நியாயமானது என்பதை உறுதிப்படுத்துகின்றன.

வினாத்தாள் கசிவுகள், குறிப்பிட்ட மையங்களில் இருந்து மொத்தமாக அதிக மதிப்பெண் பெறும் மாணவர்கள், கருணை மதிப்பெண்கள் என்ற போர்வையில் நடைமுறைக்குச் சாத்தியமற்ற அளவில் மதிப்பெண்களை அள்ளி வழங்குவது போன்ற குழப்பங்கள் தற்போதைய மத்திய அரசின் அதிகாரக்குவிப்பின் குறைபாடுகளை வெட்டவெளிச்சமாக்குகின்றன.



இவை, தொழிற்படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை நடைமுறையைத் தீர்மானிப்பதில் மாநில அரசுகள் மற்றும் பள்ளிக் கல்வி முறை மீண்டும் முதன்மை பெற வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றன.

மீண்டும் ஒருமுறை அழுத்தந்திருத்தமாகச் சொல்கிறோம்:

★ நீட் மற்றும் பிற தேசிய நுழைவுத் தேர்வுகள் ஏழை மாணவர்களுக்கு எதிரானவை.

★ அவை கூட்டாட்சியியலை சிறுமைப்படுத்துபவை.

★ சமூகநீதிக்கு எதிரானவை.

★ தேவையுள்ள இடங்களில் மருத்துவர்களின் இருப்பை பாதிப்பவை.

நீட் எனும் பிணியை அழித்தொழிக்கக் கரம்கோப்போம்! நீட்டை ஒழித்துக்கட்டும் நாள் வெகு தொலைவில் இல்லை!

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# நாடாளுமன்ற வளாகத்தில் மாற்றம்.. கொந்தளித்த விசிக.. அவை சிலைகளல்ல.. கொள்கையின் குறியீடுகள் என கண்டனம்

சென்னை, ஜூன் 9

நாடாளுமன்ற வளாகத்தில் இருந்த காந்தி உள்ளிட்ட தலைவர்களின் சிலைகளை வேறு இடத்திற்கு மாற்றியதற்கு கடும் எதிர்ப்புகள் மேலெழுந்துள்ளன. இந்நிலையில் இது குறித்து விடுதலை சிறுத்தைகள் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில், "நாடாளுமன்ற வளாகத்துக்குள் காந்தியடிகள், அம்பேத்கர் உள்ளிட்ட தேசத் தலைவர்கள் சிலரின் உருவச் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. அந்தச் சிலைகள் எல்லாவற்றையும் பாஜக அரசு அகற்றியுள்ளது. அவற்றை ஒதுக்குப்புறமான இடத்தில் வைத்து காட்சிப் பொருளாக்குவதற்கு திட்டமிட்டுள்ளது.

இந்த எதேச்சதிகார நடவடிக்கையை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் கண்டிக்கிறோம். அவற்றை பழைய இடங்களிலேயே நிறுவ வேண்டும் என வலியுறுத்துகிறோம்.


நாடாளுமன்ற வளாகத்துக்குள் இருக்கும் புரட்சியாளர் அம்பேத்கரின் சிலை 1967 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2 ஆம் தேதி அன்றைய குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 3.66 மீட்டர் உயரம் உள்ள அந்த வெண்கலச் சிலை புகழ் பெற்ற சிற்பி வி.வி.பாக் என்பவரால் வடிவமைக்கப்பட்டு 'டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் மெமோரியல் கமிட்டியினால்' நன்கொடையாக வழங்கப்பட்டது.

தேசத்தந்தை மகாத்மா காந்தியின் 4.9 மீட்டர் உயரம் கொண்ட வெண்கலச் சிலை சிற்பி ராம் வி.சுதார் என்பவரால் வடிவமைக்கப்பட்டது. 1993 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. இந்த இரண்டு சிலைகளும் இந்த தலைவர்களின் உருவச்சிலைகளாக மட்டுமின்றி அவர்களது கொள்கைகளின் குறியீடுகளாகவும் விளங்குகின்றன.

நாடாளுமன்றத்துக்குள் ஜனநாயக முறையிலான எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கும், போராடுவதற்கும் அந்தச் சிலைகளின் முன்னால்

கூடுவதையே அரசியல் கட்சியினர் வழக்கமாகக் கொண்டுள்ளனர். புரட்சியாளர் அம்பேத்கரின் பிறந்த நாளிலும், நினைவு நாளிலும் பல்லாயிரக் கணக்கானவர்கள் நாடாளுமன்றத்துக்குள் இருக்கும் அவரது உருவச்சிலைக்கு மரியாதை செலுத்துகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில் நாடாளுமன்ற வளாகத்தை அழகு படுத்துவதாக சொல்லிக் கொண்டு இந்த சிலைகளையெல்லாம் எவருக்கும் தெரியாமல் அவசர அவசரமாக மோடி அரசு அகற்றியுள்ளது. புதிய உறுப்பினர்கள் பதிவு செய்து கொள்வதற்காகப் போகும் போதுதான் இந்த உண்மைவெளியே தெரிய வந்துள்ளது.



புதிதாகக் கட்டப்பட்டுள்ள நாடாளுமன்ற கட்டடத்துக்குள் குடியரசுத் தலைவரும், பிரதமரும் நுழைவதற்குத் தனி வாயில் அமைக்கப்பட்டுள்ளது. அதற்குப் போகும் வழியில் தான் இந்த சிலைகள் உள்ளன.

அவர்களதுவாகனங்கள்வளைந்து செல்ல வேண்டி இருக்கிறது என்பதுதான் இந்த சிலைகள் அகற்றப்படுவதற்கு உண்மையான காரணமாகும்.

அதுமட்டுமின்றி தேசத் தந்தை காந்தியின் கொள்கைகளும், அரசியலமைப்புச் சட்டத் தந்தை அம்பேத்கரின் கொள்கைகளும் பாஜகவின் வெறுப்பு அரசியலுக்கும், அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரான நடவடிக்கைகளுக்கும் தடைக் கற்களாக உள்ளன.


எனவே, அவர்களது உருவச் சிலைகளைப் பார்ப்பது பிரதமர் மோடிக்குப் பிடிக்காத ஒன்றாகத் தான் இருக்கும். அங்கே ஒவ்வொரு சிலையும்நிறுவப்பட்டதன்பின்னே சிறப்பான ஒரு வரலாறு உள்ளது. அந்த வரலாற்று நினைவுகளை அழிக்க வேண்டும் என்பதும் பாஜகவின் நோக்கமாகும்.

தலைவர்களின் சிலைகள் அகற்றப்பட்டதற்கு எதிர்ப்பு கிளம்பியதும் நாடாளுமன்ற செயலகத்திலிருந்து விளக்கம் ஒன்று தரப்பட்டிருக்கிறது. 'நாடாளுமன்றத்தை சுற்றிப் பார்க்க வரும் பார்வையாளர்கள் அங்கே இருக்கும் சிலைகள் வெவ்வேறு இடங்களில் இருப்பதால் அவற்றை வசதியாகப் பார்க்க முடியவில்லை. எனவே, அந்தச் சிலைகளை யெல்லாம் ஒரே இடத்தில் காட்சிப்படுத்தி பார்வையர்கள் எளிதாக பார்ப்பதற்கு வசதி செய்து தருவதற்காகத்தான் இந்த ஏற்பாடு செய்யப்படுகிறது. இவ்வாறு சிலைகளை மாற்றி அமைப்பது சபாநாயகர் எடுத்த முடிவு" என்று தெரிவிக்கப்பட்டு ள்ளது. நாடாளுமன்ற வளாகத்தின் நிர்வாகம் சபாநாயகர் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பது உண்மை தான் என்றாலும், இந்த சிலைகளை அகற்றுகிற முடிவை தன்னிச்சையாகஅவர்எடுத்ததுஎந்தவிதத்திலும் ஏற்புடையதல்ல. அதுமட்டுமின்றித் தேர்தல் நடந்து கொண்டிருந்த நேரத்தில் எவருக்கும் தெரியாமல் ரகசியமாக, அவசர அவசரமாக சிலைகளை அகற்றியிருப்பது அவர்களின் உள்நோக்கத்தைத்தான் காட்டுகிறது.

புதிய சபாநாயகர் இன்னும் தேர்ந்தெடுக்கப்படாத நிலையில்,

பழைய சபாநாயகர் இத்தகைய முடிவை எடுப்பதற்கு அதிகாரம் உண்டா என்பது கேள்விக்குரியதாகும். தேர்தலில் பெரும்பான்மையைத் தராமல் சரியானபாடத்தைப்புகட்டினாலும் பாஜகவினர் தம்முடைய பாசிச நடவடிக்கையை நிறுத்தவில்லை என்பதையே இது காட்டுகிறது.

காந்தியடிகளையும், புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களையும் அவமதிக்கிற இந்த நடவடிக்கையை திரு. சந்திரபாபு நாயுடு அவர்களும், திரு. நிதிஷ் குமார் அவர்களும் ஆதரிக்கிறார்களா என்பதை அவர்கள் விளக்கவேண்டும். கோடிக்கணக்கான மக்களின் வணக்கத்துக்குரிய தலைவர்களுடைய உருவச் சிலைகளை அவமதிப்பதை நாடாளுமன்ற செயலகம் உடனே நிறுத்த வேண்டும். தேசத் தந்தை காந்தியடிகளின் சிலையும், அரசியலமைப்புச் சட்டத் தந்தை புரட்சியாளர் அம்பேத்கரின் சிலையும் முன்பு இருந்த அதே இடங்களில் மீண்டும் நிறுவப்பட வேண்டும் என்று விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறோம்" என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.



விழுப்புரம்வடக்குமாவட்டம்விடுதலைச்சிறுத்தைகள்கட்சிசார்பாகசிதம்பரத்தில்எழுச்சித்தமிழர்தொல்திருமாவளவன் அவர்கள் வெற்றி பெற்றதையும் விழுப்புரத்தில் பொதுச் செயலாளர் துரை ரவிக்குமார் வெற்றி பெற்றதையும் கொண்டாடு விதமாக மீனம்பூர் முகாம் சார்பாக வெற்றி விழா கொண்டாட்டம் நிகழ்ச்சி நடைபெற்றது இந் நிகழ்ச்சிக்கு மீனம்பூர் வெற்றி வளவன் தலைமை தாங்கினார் மீனம்பூர் முனுசாமி வரவேற்றார் இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் அ எ தனஞ்செழியன் அவர்கள் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார் இந்த நிகழ்ச்சியில் மாநில துணை செயலாளர் துரை வளவன் மாவட்ட அமைப்பாளர் செஞ்சி அரசு ஒன்றிய பொருளாளர் அ பார்வேந்தன் இளஞ்சிறுத்தை எழுச்சி பாசறை மாவட்ட துணை அமைப்பாளர் செஞ்சி நஅம்பேத் சிவகுமார் அன்னமங்கலம் முனுசாமி மீனம்பூர் முகாமை சார்ந்த பூபாலன் இளங்கோவன் சந்தோஷ் குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்

# தமிழக வெற்றிக் கழகம் ஆலோசனை கூட்டம் 2026 சட்டப்பேரவை தேர்தல் குறித்து முக்கிய முடிவு?

சென்னை, ஜூன் 9

தமிழக வெற்றிக் கழகம் என்ற கட்சியை, நடிகர் விஜய் துவங்கியுள்ளார். கட்சியை, தேர்தல் கமிஷனில் பதிவு செய்வதற்கான விண்ணப்பம், கடந்த பிப்ரவரியில் வழங்கப்பட்டது. ஆனால், கட்சியை பதிவு செய்யாமல், தேர்தல் கமிஷன் நிலுவையில் வைத்தது. இதை தொடர்ந்து, பொதுச் செயலராக புதுச்சேரி முன்னாள் எம்.எல்.ஏ., ஆனந்த், பொருளாளராக வெங்கட்ரமணன், தலைமை நிலைய செயலராக கடலூர் ராஜசேகர், இணை கொள்கை பரப்பு செயலராக, வேலூர் தாஹீரா ஆகியோரை, விஜய் நியமித்தார்.



இதை தொர்ந்து விபரங்கள், தேர்தல் கமிஷனுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இதை ஏற்றுள்ள தேர்தல்கமிஷன், கட்சி தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால், வரும் 11ம் தேதிக்குள் தெரிவிக்க வேண்டும் என, கெடுவிதித்துள்ளது.

ஆட்சேபனைகள் வராத பட்சத்தில், தமிழக வெற்றிக் கழகத்தை மாநில கட்சியாக பதிவு செய்து, இம்மாத இறுதிக்குள் தேர்தல் கமிஷன் அறிவிக்கும் என தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில்சென்னை பனையூரில் வரும் 18 ஆம் தேதி பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் தலைமையில் தமிழக வெற்றி கழகம் நிர்வாகிகள் ஆலோசனை நடத்த உள்ளதாக கூறப்படுகிறது.

இதில் விஜய் பிறந்தநாளில் செய்ய வேண்டிய நலத்திட்ட உதவிகள், 2026 சட்டப்பேரவை தேர்தலுக்கு தயாராகும் வகையில் புதிய நிர்வாகிகள் நியமனம் குறித்து ஆலோசிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆத்தூர் சித்தையன் கோட்டையில் அகில இந்திய ராஜகுலத்தோர் பேரவையின் தலைவரும் தேசிய சமூக நீதிக் கட்சியின் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டும் பேருரை நிகழ்வு

ஆத்தூர், ஜூன் 9

ஆத்தூர் சித்தையன் கோட்டையில் அகில இந்திய ராஜகுலத்தோர் பேரவையின் தலைவரும் தேசிய சமூக நீதிக் கட்சியின் தேசிய தலைவருமான M.K. வெங்கடேஷ் குமார் அவர்கள் தலைமையில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டும் பேருரை நிகழ்வும் நடைபெற்றது

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் வட்டம் சித்தையன் கோட்டை பேரூராட்சிக்கு உட்பட்ட செங்காட்டு காலனியில் தேசிய சமூக நீதி கட்சி அகில இந்திய ராஜகுலத்தோர் பேரவை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு தேசியத் தலைவர் M.K.வெங்கடேஷ் குமார் அவர்கள் தலைமை வகித்து புதிய பொறுப்பாளர்களை நியமனம் செய்தார் . முன்னதாக அவர் பொதுமக்களிடம் இட ஒதுக்கீடு உள்ளாட்சி தேர்தலில் பங்கேற்பது குறித்து விளக்கம்அளித்து கூறியதாவது.

என் அன்பிற்கினிய உடன் பிறந்த சகோதர சகோதரிகளே, இளைஞர்களே, என்னை வழிநடத்தும் பெரியோர்களே சான்றோர்களே உங்கள் அனைவருக்கும் இத்தருணத்தில் எனது அன்பினை உறுத்தாக்குகிறேன்.நாம் அனைவரும் மிகப்பெரிய சபதம் ஏற்போம் அதில் பெண்கள் பாதுகாப்பு மற்றும் கல்வி, வேலை வாய்ப்பு, என்பது உங்கள் நினைவில் இருக்கும் அது மட்டுமல்ல கட்சியின் கட்டமைப்பு, கட்சியின் கொள்கை வெளிபடுத்துதல், உள்ளாட்சி தேர்தலில் பங்களிப்பு மற்றும் உறுப்பினர் சேர்க்கை என நம் கடமைகள் நீண்டுக்கொண்டே இருக்கிறது. எனவே நமது பணி வேகம் எடுக்கவேண்டும் தினம் ஒரு தகவல்கள் உங்களிடம் இந்த இளைஞரணி மாநில தளத்தில் பதிவிட வேண்டும் மட்டுமின்றி உங்களுக்கான மண்டல குழுவில் (வாட்சப்) இளைஞரணி தம்பிகளை தங்களுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ளவர்களை உங்களது தளத்திலும் மற்ற மாவட்டங்களில் உங்களுக்கு தெரிந்தவர்கள் இருந்தால் அவர்கள் எந்த மாவட்டத்தை சார்ந்தவர்கள் என்று அறிந்து அவர்களை அந்த மாவட்ட பொறுப்பாளர்களை அணுகி அவர்கள் மூலமாக அந்த மண்டல குழுவில் சேர்த்து விடவேண்டும் மேலும் சேர்க்கும் தம்பிகளுக்கு நமது கட்சி கொள்கை ,கோட்பாடு,நமது லட்சியம் நமது போராட்டம், பங்களிப்பு போன்ற எல்லாவற்றையும் தெளிவாக எடுத்துக்கூறி ராணுவத்தில் இருக்கும் சிப்பாய்களாக, போராளிகளாக உருவாக்கி அவர்களை இந்த தளத்தில் சேர்த்துவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். இதுவே நமது முதல் பணி தங்களுக்கான ஒதுக்கப்பட்ட மண்டல குழுவை இதுவரை யாரும் பார்க்கவில்லை என்று நினைக்கிறேன்.

எனவே அந்த குழுவில் நீங்கள் இன்றையில் இருந்து பராமரிப்பு (அட்மின்) செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் மாவட்டங்களில் இளைஞரணி பொறுப்பாளர்களை கட்சிக்கு தேர்வு செய்து தலைமை மூலமாக பதவி பெற்றுக்கொடுத்து மாவட்டங்களில் இளைஞர் ராணுவ பட்டாளத்தை கட்டமைத்து. நமது கொடி அனைத்து மாவட்டங்களில் பட்டொளி வீசி பறக்கவிட வேண்டும் நம் சமுதாயத்தாலும்,நம் கட்சியாலும் அனைத்து மக்களும் சமூக நீதியோடு வாழவேண்டும் என உரிமையோடு உங்களிடத்தில் எடுத்துரைக்கிறேன். எந்த நேரத்திலும் தாயார்நிலையில் இருக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் எனக்கூறினார்... மேலும் இக்கூட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் மதுரை வீரன் தலைமை வகித்தார். உடன் மாநில ஒருங்கிணைப்பாளர் வெள்ளைச்சாமி, மாநில இணைசெய்தி தொடர்பாளர் அழகர்சாமி, மற்றும் ஒன்றிய நிர்வாகிகள், புதிதாக இணைந்த மாவட்ட ,ஒன்றிய நிர்வாகிகள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# சென்னை, கோவைக்கு ஆம்னி பஸ்களில் கட்டணம் கடும் உயர்வு

நெல்லை, ஜூன் 9

தமிழகத்தில் மட்டும் 3 ஆயிரத்துக்கும்அதிகமான தனியார் ஆம்னி பஸ்கள் உள்ளன.



இந்த ஆம்னி பஸ்கள் அனைத்தும் பண்டிகை நாட்களில் தங்களின் விருப்பத்துக்கு ஏற்ப பயணக் கட்டணத்தை உயர்த்தி கொள்கின்றன என்ற குற்றச்சாட்டு தொடர்ந்து எழுப்பப் பட்டு வருகிறது.

அதிக விலைக்கு கட்டணத்தை உயர்த்தும் பஸ் நிறுவனம் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு அறிவித்தாலும், அந்த அறிவிப்புகளை எல்லாம் எந்தப் பஸ் நிறுவனமும் பொருட்படுத்துவது இல்லை.

பண்டிகை நாட்கள் மட்டுமின்றி தொடர் விடுமுறை நாட்களாக இருந்தாலும், வார இறுதி நாட்களிலும் இது போன்ற கட்டண உயர்வு தொடர் கதையாகவே இருக்கிறது. இதற்கு ஒரு நிரந்தர தீர்வு வேண்டும் என்பதே மக்களின் எண்ணமாக இருக்கிறது.

வழக்கமாக சென்னை பெருநகரத்தில் இருந்து பள்ளி தொடர்விடுமுறை, பண்டிகை காலகட்டங்களின் போது நெல்லை, தென்காசி, குமரி மாவட்டங்களை சேர்ந்தவர்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு திரும்புவார்கள். இதனைபயன்படுத்திதனியார் பஸ்கள் அதிக கட்டணத்தை வசூல் செய்து வருவது வாடிக்கையாக இருந்து வருகிறது. இந்நிலையில் பள்ளிகளுக்கு கோடை விடுமுறை முடிந்து நாளை மறுநாள் (திங்கட்கிழமை) முதல் பள்ளிகள் திறக்கப்படுகிறது. இதன் காரணமாக ஏராளமானவர்கள் நெல்லை, தென்காசி, குமரி மாவட்டங்களில் இருந்து சென்னை, பெங்களூர் உள்ளிட்ட பகுதிகளுக்கு புறப்பட்டுள்ளனர்.

பொதுவாக பயணிகளின் முதல் பயணத் தேர்வாக இருப்பது ரெயில் பயணம் தான். ஆனால் அதற்கு 2 மாதங்களுக்கு முன்பே டிக்கெட் புக் செய்யாவிட்டால் இடம் கிடைக்காது என்பதால் இறுதி கட்டத்தில் பயணம் செய்பவர்கள் அரசு பஸ்களை நாடுகின்றனர். அதிலும் இடம் கிடைக்காதவர்கள் கடைசி பயணமாக தனியார் ஆம்னி பஸ்களை பயன்படுத்துகின்றனர்.

இதனை வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டு தனியார் பஸ் நிறுவனத்தினர் டிக்கெட் கட்டணத்தை கடுமையாக உயர்த்தி உள்ளதாக புகார்கள் எழுந்துள்ளது.

நாளை மறுநாள் பள்ளிகள் திறக்கப்படும் நிலையில் இன்று சென்னை, கோவை நகரங்களுக்கு இயக்கப்படும் ஆம்னி பஸ்களின் கட்டணம் வழக்கத்தை விட கடுமையாக உயர்ந்துள்ளது.

சாதாரண நாட்களில் நெல்லையில் இருந்து சென்னைக்கு இயக்கப்படும் ஆம்னி பஸ்களில் சாதாரண இருக்கைகளுக்கு ரூ.600 முதல் கட்டணம் வசூலிக்கப்படும். அதேநேரத்தில் படுக்கை வசதிக்கு ரூ.900 முதல் வசூலிக்கப்படுகிறது. மேலும் ஏ.சி.படுக்கை வசதிக்கு பஸ்களின் தரத்திற்கு ஏற்ப ரூ.1,200 முதல் 1,500 வரை கட்டணம் வசூலிக்கப்படும்.

இந்நிலையில் இன்றும், நாளையும் நெல்லையில் இருந்து சென்னைக்கு இயக்கப்படும் ஆம்னி பஸ்களில் கட்டணம் ரூ.935 முதல் ரூ.3500 வரை என கடுமையாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஏ.சி. அல்லாத சில பஸ்களில் இருக்கை கட்டணம் ரூ.900ல் இருந்து தொடங்குகிறது. மேலும் நேரங்களுக்கு தகுந்தவாறு ஏ.சி. அல்லாத பஸ்களில் சென்னைக்கு செல்ல கட்டணமாக ரூ.1000 என வசூலிக்கப்படுகிறது. இதேபோல ஏ.சி. வசதியுடன் கூடிய பஸ்களில் இருக்கை கட்டணமாக ரூ.1,150, ரூ.1,400, ரூ.1,580 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஏ.சி. சிலீப்பர் சீட்டுக்கு ரூ.1,800 முதல் ரூ.2,000, ரூ.2,100 வரை கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. அதேநேரம் நாளை இதே பஸ்களில் சென்னை செல்வ தற்கு கட்டணம் மேலும் உயர்த்தப்பட்டுள்ளது.

அதாவது நாளை சென்னை செல்ல ஆம்னி பஸ்களில் குறைந்த பட்ச இருக்கை கட்டணமே ரூ.1,100 ஆக உயர்ந்துள்ளது. தொடர்ந்து சில பஸ்களில் ஏ.சி. இருக்கைக்கு ரூ.1,300, ரூ.1400, ரூ.1500 என கட்டணம் உயர்த்தப் பட்டுள்ளது.

மேலும் ஏ.சி. சிலீப்பர் இருக்கைகளுக்கு ரூ.2 ஆயிரம் முதல் ரூ.2,200, ரூ.2,300 ரூ.2,400, ரூ.2500, ரூ.2,800, ரூ.3,000, ரூ.3,400 வரை கட்டணம் உயர்த்தப் பட்டுள்ளது.

இதேபோல நாகர்கோவில், மார்த்தாண்டம், திருவட்டார் பகுதிகளில் இருந்து சென்னைக்கு இயக்கப்படும் பஸ்களிலும் கட்டணம் கடுமையாக உயர்ந்துள்ளது. சாதாரண இருக்கைகளுக்கு ரூ.1000த்தில் இருந்து தொடங்கி ரூ.1250, ரூ.1300, ரூ.1500 என கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

அதேநேரத்தில் ஏ.சி. இருக்கைகளுக்கு ரூ.2 ஆயிரம் முதலும், ஏ.சி. படுக்கை வசதிகளுக்கு ரூ.2500 முதல் ரூ.3500 வரை என கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

இதேபோல நெல்லையில் இருந்து கோவைக்கு செல்வதற்கு ஏ.சி.அல்லாத பஸ்களில் கட்டணம் ரூ.700 முதல் ரூ.850, ரூ.1000 என உயர்த்தப்பட்டுள்ளது.

அதேநேரம் ஏ.சி.சிலீப்பர் சீட்டுகளுக்கு ரூ.1,139 முதல் ரூ.1200, ரூ.1341, ரூ.1500 என கட்டணம் கடுமையாக உயர்த்தப்பட்டுள்ளது.

சாதாரணமான நாட்களில் நெல்லையில் இருந்து நாகப்பட்டினத்திற்கு செல்வதற்கு குளிர்சாதன வசதி இல்லாத பஸ்களில் ரூ. 650ம், குளிர்சாதன வசதி கொண்ட பஸ்சில் ரூ.900 முதல் ரூ. 1,200 என்ற நிலையில் டிக்கெட்டுகள் வசூல் செய்யப்படும். ஆனால் இன்று குளிர்சாதன வசதி இல்லாத பஸ்களில் கட்டணம் ரூ.350 வரை உயர்ந்து ஒரு டிக்கெட் ரூ. 1000 என நிர்ணயிக்கப் பட்டுள்ளது. அதேபோல் குளிர்சாதன வசதி கொண்ட பஸ்களின் கட்டணமும் ஒரு டிக்கெட்டுக்கு ரூ.200 வரை உயர்ந்து காணப்படுகிறது.

இதேபோல் நெல்லையில் இருந்து சென்னைக்கு செல்லும் பஸ்களின் கட்டணமும் எதிர்பார்க்காத அளவுக்கு உயர்ந்துள்ளது.

# கட்டுமாவடியில் 4வது நாளாக கனமழை மழைநீருடன் கழிவுநீர் வீட்டுக்குள் புகுந்ததால் பொதுமக்கள் அவதி

மணமேல்குடி ஜூன் 9

புதுக்கோட்டை மாவட்டம்மணமேல்குடிஅருகே கட்டுமாவடியில் 4 நாட்களாக பெய்த கனமழையால் மழை நீருடன் கழிவு நீர்வீட்டுக்குள்புகுந்ததால் பொதுமக்கள் பாதிப்படைந்தனர்.



தமிழக முழுவதும் பல்வேறுபகுதிகளில்கோடை மழை பெய்து வருகிறது. இதேபோன்று புதுக்கோட்டை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நல்ல மழை பெய்துள்ளது. கடலோரப் பகுதியான கட்டுமாவடியில் தொடர்ந்து நான்கு நாட்களாக மழை பெய்தது. இதனால் தாழ்வான பகுதிகளில் குளம்போல் தண்ணீர் தேங்கியுள்ளது.

கட்டுமாவடி புதுமனை தெருவில் வடிநீர் வாய்க்கால்களை பொதுமக்கள் ஆக்கிரமிப்பு செய்ததாலும், மழைநீர்செல்ல வழி இல்லாததாலும் கழிவு நீருடன் மழைநீர் கலந்து வீடுகளுக்குள் புகுந்துள்ளது. இதனால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகினர். எனவே ஊராட்சி நிர்வாகமும், மாவட்ட நிர்வாகமும் நடவடிக்கை எடுத்து ஆக்கிரமிக்கப் பட்ட வடிகால்களை சீரமைத்து, மழைநீர் செல்ல வழி ஏற்படுத்த வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# 'நீட்' தேர்வு முடிவுகளில் ஏற்பட்ட குளறுபடிகளுக்கு காரணம் என்ன?

சென்னை, ஜூன் 9

நீட் தோ்வு நாடு முழுவதும் கடந்த மாதம் 5ந்தேதி நடத்தப்பட்டது. இத் தோ்வு மீது பல்வேறு புகாா்கள் எழுந்தன.




பீகாரில் உள்ள ஒரு தோ்வு மையத்தில் வினாதாள் கசிந்ததாக புகாா் எழுந்தது. ராஜஸ்தானில் உள்ள ஒரு மையத்தில் வினாதாள் வினியோகத்தில் குளறுபடி ஏற்பட்ட நிலையில், தோ்வு தொடங்குவதற்கு முன்பாக நீட் வினாதாளை சில மாணவா்கள் சமூக ஊடகத்தில் பதிவிட்டதாக சா்ச்சை எழுந்தது.

இருந்த போதும், இந்தப் புகாா்களை அத்தோ்வை நடத்தியதேசியதோ்வுகள் முகமை (என்.டி.ஏ.) மறுத்தது.

இந்த நிலையில், நீட் தோ்வு முடிவுகள் பாராளுமன்றத்தோ்தல்முடிவுகள் வெளியான ஜூன் 4ந் தேதி வெளியிடப்பட்டது. இதில், முன்பு எப்போதும் இல்லாத வகையில் 67 மாணவா்கள் முதலிடம் பெற்றதோடு, அரியானாவில் ஒரே தோ்வு மையத்தில் தோ்வெழுதிய 6 போ் முதலிடம் பெற்றது பெரும் சா்ச்சையானது.

'நீட் தோ்வில் குறிப்பிட்ட சில மாணவா்களுக்கு மட்டும் கூடுதல் மதிப்பெண் வழங்கப்பட்டு உள்ளது' என்று சில மாணவா்கள் புகாா் தெரிவித்தனா்.

இதை மறுத்த என்.டி.ஏ., 'என்.சி.இ.ஆர்.டி. பாட புத்தகங்களில் மேற்கொள்ளப்பட்ட சில மாற்றங்களாலும் தோ்வு மையங்களில் சில தோ்வா்கள் நேரத்தை இழந்ததாலும் கூடுதல் மதிப்பெண்கள் வழங்கப்பட்டது' என்று விளக்கம் அளித்தது.

நீதிமன்றங்களை நாடியவர்களுக்கு அத்தகைய மதிப்பெண்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் மற்றவர்களுக்கு ஏன் அவ்வாறு வழங்கப்படவில்லை என கேள்வி எழுந்துள்ளது.

இது தொடர்பான விளக்கத்தை தேசிய தேர்வு முகமை வெளியிட்டது.

பஞ்சாப் அரியானா, டெல்லி, சண்டிகார் ஐகோர்ட்டுகளில் சில தேர்வர்கள் மனுதாக்கல் செய்திருந்ததாகவும், சி.சி. டி.வி. கேமராக்களை கண்காணித்து அதன் பேரில் 1,563 பேருக்கு கருணை மதிப்பெண்கள் வழங்கியதாகவும் என்.டி.ஏ. தெரிவித்திருந்தது.

அதேபோன்று இயற்பியல் பிரிவில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு இரு விடைகள் பொருத்தமானதாக இருந்தன. இதையடுத்து இரு விடைகளில் ஏதாவது ஒன்றைத் தேர்வு செய்தவர்களுக்கு மதிப்பெண் வழங்கப்பட்டது.

அவ்வாறு இரண்டில் ஒன்றை தேர்வு செய்து மதிப்பெண் பெற்றவர்களில் 44 பேரும், நேர இழப்புக்குகருணைமதிப்பெண் வழங்கப்பட்டவர்களில் 6 பேரும் 720க்கு 720 மதிப்பெண்கள் பெற்றதாக என்.டி.ஏ. விளக்கம் அளித்து இருந்தது.

நீட் தேர்வுக்கான மொத்த வினாக்கள் 180. ஒவ்வொருசரியானவிடைகளுக்கும் 4 மதிப்பெண் வழங்கப்படும். தவறான பதில்களுக்கு 5 மதிப்பெண்கள் குறைக்கப்படும். இதன்படி 720 மதிப் பெண்கள் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது வெளியாகி உள்ள தேர்வுப் பட்டியலில் 718 மற்றும் 719 மதிப்பெண்கள் வழங்கப்பட்டு உள்ளது.

ஒரு கேள்விக்கு பதில் அளிக்காமல் இருந்தால் 716 மதிப்பெண்கள் வழங்கி இருக்க வேண்டும். தவறாக பதில் அளித்து இருந்தால் 715 மதிப்பெண் வழங்கி இருக்க வேண்டும். ஆனால் 718, 719 என எவ்வாறு வழங்கப்பட்டது எனத் தெரியவில்லை.

இதற்கு தேசிய தேர்வு முகமை கருணை மதிப்பெண்வழங்குவதாக தெரிவிக்கின்றனர். நீட் தேர்வு எழுதிய 23 லட்சத்து 33 ஆயிரத்து 297 பேரில் எத்தனை பேருக்கு கருணை மதிப் பெண்கள் வழங்கப்பட்டுள்ளது என்று கூறாமல் இருப்பதும் நியாயம் இல்லை.

இதனால் இந்த ஆண்டு 650 மதிப்பெண்கள் எடுத்தவர்களுக்கு கூட அரசு மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கு வாய்ப்பு கிடைக்குமா? என்பது சந்தேகம்.

டெல்லி எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரியில் உள்ள 125 எம்.பி.பி.எஸ். இடங்களில் 46 மட்டுமே பொதுப் பிரிவுக்கானவை, நடப்பாண்டு நீட் தேர்வில் 67 பேர் முதலிடம் பிடித்து உள்ள நிலையில் 47வது மாணவர் பொதுப்பிரிவை சேர்ந்தவராக இருந்தால் அவருக்கு எய்ம்ஸ் கல்லூரியில் இடம் கிடைக்காது. ஒருவர் முழு மதிப்பெண் பெற்றாலும் விரும்பிய இடம் கிடைக்காது என்பதால் தேர்வு முறையை சீரமைப்பது தான் ஒரே வழி என்கின்றனர் கல்வியாளர்கள்.

அது மட்டுமல்லாது, கருணை மதிப்பெண்களால் 6 பேர் தேசிய அளவில் முதலிடம் பெற்றுள்ள நிலையில் அது குறித்த எந்த தகவலும் தெரியாததால் தமிழக மாணவர்கள் நேர இழப்பை முன்னிறுத்தி கோர்ட்டை நாடவில்லை. அதன் காரணமாக தமிழகத்தைச் சேர்ந்த பல மாணவர்களுக்கு கூடுதல் மதிப்பெண் கிடைக்கும் வாய்ப்பு இல்லாமல் போனது.


அதேபோன்று சர்ச்சைக்குரிய இயற்பியல் கேள்வியில் இரு விடைகள் பொருத்தமாக உள்ளது என்பதால் நெகடிவ் மதிப்பெண் வந்து விடுமோ என்ற அச்சத்தில் அதற்கு விடை அளிக்காத தேர்வர்களுக்கு 4 மதிப்பெண்கள் கட்டாயம் குறைந்திருக்கும். தமிழகத்தில் அவ்வாறு பல மாணவர்கள் அந்த கேள்வியை தவிர்த்துள்ளனர் என்றும், அதன் காரணமாக தர வரிசையிலும், மதிப்பெண்களிலும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்கள் அவர்கள் பின்னுக்கு தள்ளப்பட்டிருப்பதாகவும் குற்றச்சாட்டு வைக்கப்படுகிறது.

இதுபோன்று பல விமர்சனங்களுக்கு தேசிய தேர்வு முகமை வெளியிட்ட விளக்கத்தில் பதில் இல்லை. இந்த விவகாரத்தில் அரசு தலையிட்டு உரிய தீர்வை அளிக்க வேண்டும் என்பதே கல்வியாளர்களின் இப்போதைய கோரிக்கையாக உள்ளது.

# தனுஷ்கோடியில் ரூ.15 கோடியில் கட்டப்பட்ட மீன்பிடி இறங்கு தளம் இடிந்து கடலில் மூழ்கியது

ராமேசுவரம், ஜூன் 9

ராமநாதபுரம் மாவட்டம், மன்னார் வளைகுடா கடல் பகுதியில் அமைந்துள்ளது தனுஷ்கோடி. இந்த பகுதியில் கடல் பெரும்பாலான நாட்களில் கடல் சீற்றத்துடனேயே காணப்படும். இதனால், இந்த பகுதியில் துணை துறைமுகம் அமைக்க முடியாத நிலை இருந்து வருகிறது.



இந்த நிலையில், இங்கு ரூ.15 கோடி மதிப்பீட்டில் 70 அடி அகலமும், 70 அடி நீளமும் கொண்ட 'டி' வடிவிலான மீன் இறங்கு தளம் அமைக்கப்பட்டது. அப்போது அந்த பகுதியை சேர்ந்த மீனவர்கள் இந்த இடத்தில் மீன் இறங்கு தளம் அமைத்தால் சேதமடைந்து விடும் என தெரிவித்தனர். ஆனால்அதனை அதிகாரிகள் கண்டுகொள்ளவில்லை.

இதன் பின்னர் பாலம் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட்டது. இரண்டு மாதங்கள் மட்டுமே இந்த பாலம் பயன்பாட்டில் இருந்தது. இதன் பின்னர் கடல் சீற்றம் காரணமாக அந்த பகுதிக்கு மீனவர்கள் படகுகளுடன் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

இதனைதொடர்ந்து, மீனவர்கள் இந்த மீன் இறங்கு தளத்தை பயன்படுத்துவதை தவிர்த்து விட்டனர். இதன் பின்னர் தனுஷ்கோடிக்கு வரும் சுற்றுலா பயணிகள் மற்றும் பக்தர்களில் செல்பி எடுக்கும் இடமாக இந்த பாலம் மாறியது.

இந்த நிலையில் தொடர்ந்து சூறை காற்று மற்றும் கடல் சீற்றத்தில் ஏற்படும் அலைகள் மீன் இறங்கு தளத்தில் மீது மோதி மோதி பாலம் சேதமடைய தொடங்கியது. இதன் பின்னர் அந்த பாலம் முழுமையாக அடைக்கப்பட்டது. தற்போது பாலம் ஒரு பகுதி சேதமடைந்து உடைந்து கடலில் மூழ்கி வருகிறது.

மீனவர்கள் பலமுறை எச்சரித்தும் அந்த இடத்தில் பாலத்தை கட்டி ரூ.15 கோடியை அதிகாரிகள் வீணடித்து விட்டதாக தனுஷ்கோடி மீனவர்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.

# தேர்தல் தோல்வி எதிரொலி: அண்ணாமலைக்கு எதிர்ப்பு வலுக்கிறது



சென்னை, ஜூன் 9

பாராளுமன்ற தேர்தலில் பா.ஜ.க. கூட்டணிக்கு தமிழகத்தில் ஒரு இடம் கூட கிடைக்கவில்லை. அ.திமு.க.வுடன் கூட்டணி அமைத்து இருந்தால் 10 க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வென்றிருக்க முடியும். இதை அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க. வேட்பாளர்கள் வாங்கிய ஓட்டுகளே உறுதிப்படுத்தியது.

இதனால் இரு கட்சிக்குள்ளும் தொண்டர்கள் ஆதங்கப்படுகிறார்கள். கூட்டணி முறிவுக்கு கட்சி தலைமையை குற்றம் சாட்டுகிறார்கள்.

அண்ணாமலையின் தவறான முடிவுதான் கூட்டணி முறிந்ததற்கு காரணம் என்று அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி கூறினார். அதற்கும் உடனடியாக பதிலளித்த அண்ணாமலை "அ.தி.மு.க.வை மக்கள்நிராகரித்துவிட்டதாக" கூறினார்.

அடுத்து வரும் தேர்தலிலாவது இந்த கூட்டணி அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கும் நிலையில் அண்ணாமலையின் கருத்து மீண்டும் அ.தி.மு.க.வினரிடையே ஆத்திரத்தை ஏற்படுத்தி உள்ளது.

முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் "பா.ஜ.க.வுடன் இனி எப்போதும் கூட்டணி கிடையாது" என்று அதிரடியாக அறிவித்தார்.

தேர்தலில் பா.ஜ.க. 23 இடங்களில் போட்டியிட்டது. அதில் 11 இடங்களில் டெபாசிட்டை பறிகொடுத்தது. நாகையில் 4வது இடத்துக்கு தள்ளப்பட்டது. அதே போல் இந்த கூட்டணியில் இடம் பெற்றிருந்த த.மா.கா., ஐ.ஜே.கே., அ.ம.மு.க. உள்ளிட்ட கட்சிகளும் 10 இடங்களில் டெபாசிட் வாங்கவில்லை.

அ.தி.மு.க.வுடன் கூட்டணி இல்லை என்ற தலைமையின் ஒரு தலைபட்ச முடிவுதான் இந்த பின்னடைவுக்கு காரணம் என்று புகார் தெரிவித்து உள்ளார்கள்.

பா.ஜ.க. அறிவுசார் அணியின் பொருளாளர் கல்யாணராமன், "அண்ணாமலை கட்சி மேலிடத்தை தவறாக வழி நடத்துகிறார்" என்று குற்றம் சாட்டினார்.

தற்போதும், 2014 தேர்தலில் பா.ஜ.க. 5.56 சதவீத வாக்குகள் பெற்றிருந்த நிலையில் தற்போது தனது தலைமையில் 11.24 சதவீத வாக்குகளை பெற்றுள்ளதாக அண்ணாமலை மேலிடத்துக்கு தெரிவித்துள்ளார்.

இதுவே தவறு. 2014 தேர்தலில் பா.ஜ.க. 9 தொகுதிகளில் மட்டுமே போட்டியிட்டது. அந்த கணக்குப்படி பார்த்தால் இந்த தேர்தலில் 14.25 சதவீதம் பெற்று இருக்க வேண்டும். ஆனால் 11 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளது. இப்படி எல்லாமே தவறான வழிகாட்டல்தான்.

ஒரு மனிதர் செய்த தவறுகளுக்கு சிறிதளவேணும் தார்மீக பொறுப்பை ஏற்க வேண்டும். ராஜினாமா செய்யலாம். அல்லது குறைந்தபட்சம் ராஜினாமா செய்யப்போவதாக நாடகமாவது ஆடலாமே என்றார். கட்சிக்குள் எதிர்ப்பு வலுத்து வருவதால் தலைமையில் மாற்றம் வருமா? என்ற பரபரப்பும் ஏற்பட்டுள்ளது.

# 70.67 லட்சம் மாணவர்களுக்கு இலவச பாடநூல்கள் நாளை முதல் வழங்கப்படும்




சென்னை, ஜூன் 9


தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் 2024,2025ம் ஆண்டுக்கான தமிழ்நாடு பட்ஜெட் உரையில் அறிவிக்கப்பட்டபடி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் அதன் கீழ் இயங்கி வரும் நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவின் வாயிலாக "நான் முதல்வன் ரெயில்வே மற்றும் வங்கிப் பணிகளுக்கான 6 மாத கால கட்டணமில்லா உறைவிடப் பயிற்சியினை" தொடங்க உள்ளது. இப்பயிற்சிக்கான 1000 பயனாளர்களை தேர்ந்தெடுப்பதற்காக அடுத்த மாதம் (ஜூலை) 14ந்தேதி இருவேறு நுழைவுத் தேர்வுகளை நடத்தவுள்ளது.

இத்திட்டத்தில் பயன் பெற விரும்பும் மாணவர்கள் வங்கித் தேர்வுக்களுக்கான பயிற்சி அல்லது ரெயில்வே தேர்வுகளுக்கான பயிற்சி, இவற்றில் ஏதேனும் ஒன்றுக்கு மட்டுமே பயிற்சி மேற்கொள்ள முடியும்.

இந்த நுழைவுத் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ள மாணவர்கள், https://www.naanmudhalvan.tn.gov.in என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் விரிவான அறிவிக்கையைப் படித்துப் பார்த்து, இன்று (சனிக்கிழமை) முதல் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இத்தேர்வுக்கு விண்ணப்பிக்க கடைசி தேதி 23ந்தேதி ஆகும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஒகேனக்கல்லில் நீர்வரத்து 3000 கனஅடியாக அதிகரிப்பு



ஒகேனக்கல், ஜூன் 9

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்ததால் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரிப்பதும் குறைவதுமாக இருந்து வருகிறது.

கர்நாடக மாநிலத்திலும், காவிரி கரையோர நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் கனமழை பெய்து வருவதால் தமிழககர்நாடகா எல்லை பகுதியான பிலிகுண்டுலுவில் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரிக்க தொடங்கியது.

இந்த நீர்வரத்தால் தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லில் நீர்வரத்து அதிகரித்தது.

கடந்தசிலதினங்களுக்கு முன்பு ஒகேனக்கல்லில் நீர்வரத்து 1000 ஆயிரம் கன அடியாக நீடித்து வந்தது.

இந்த நிலையில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளான அஞ்செட்டி, நாட்றாம்பாளையம், ஊட்டமலை உள்ளிட்ட பகுதிகளில் கனமழை காரணமாக நேற்று ஒகேனக்கல்லில் நீர்வரத்து சற்று அதிகரித்து வினாடிக்கு 2000 கனஅடியாக வந்தது. இந்த நீர்வரத்து இன்று காலை நிலவரப்படி மேலும் அதிகரித்து 3000 கனஅடியாக வந்து கொண்டிருக்கிறது.

நீர்வரத்து அதிகரிப்பால் ஒகேனக்கல்லில் மெயின் அருவி, சினிபால்ஸ் உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் சீறிபாய்ந்து செல்கிறது.

வருகிற 10ந்தேதி பள்ளி திறப்பாலும், கோடைவிடுமுறை நாளையுடன் முடிய இருப்பதாலும் ஒகேனக்கல்லில் இன்று அதிகளவில் சுற்றுலா பயணிகள் குவிந்தனர். ஒகேனக்கல்லில் நீர்வரத்து அதிகரிப்பால் சுற்றுலா பயணிகள் பரிசல் நிலையத்தில் இருந்து ஊட்டமலை, ஐந்தருவி, அத்திமரத்துகடுவு ஆகிய பகுதி வரை பரிசலில் சென்று மகிழ்ந்தனர். பின்னர் அவர்கள் எண்ணெய் மசாஜ் செய்து கொண்டு அருவிகளில் குளித்து மகிழ்ந்தனர். சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பால், பஸ் நிலையம், கடைவீதிகள், ஓட்டல்கள் கூட்டம் அலைமோதியது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை காரணமாக ஒகேனக்கல்லில் நீர்வரத்து அதிகரித்து வருவதால் பிலிகுண்டுலுவில் தொடர்ந்து மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் நீர்வரத்தை கண்காணித்து வருகின்றனர்.

# ரூ.2 ½ லட்சத்துக்கு பச்சிளம் குழந்தையை வாங்கிய விவசாயி கைது



சூலூர், ஜூன் 9

பீகாரை சேர்ந்தவர் மகேஷ்குமார். இவரது மனைவி அஞ்சலி.

இவர்கள்கோவைமாவட்டம் சூலூர் அருகே உள்ள அப்பநாயக்கன்பட்டியில் ஓட்டல் வைத்து நடத்தி வந்தனர்.

இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு இவர்கள் 2 பேரும் பீகாரில் இருந்து பச்சிளம் குழந்தையை கடத்தி வந்து விற்பனை செய்ததாக போலீசாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வந்தனர்.

இந்த சம்பவத்தில் வேறு யாருக்கு எல்லாம் தொடர்பு உள்ளது. யாரிடம் இருந்து குழந்தை கடத்தி வரப்பட்டது. வாங்கியவர்கள் யார்? என்பது உள்ளிட்ட விரிவான விசாரணை நடத்த மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு பத்ரிநாராயணன் உத்தரவிட்டார். அதன்பேரில் கருமத்தம்பட்டி டி.எஸ்.பி. தங்கராமன் மேற்பார்வையில் கருமத்தம்பட்டி அனைத்து மகளிர் போலீஸ் இன்ஸ்பெக்டர் சுமதி தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு விசாரணை நடந்து வந்தது. தனிப்படை விசாரணையில், குழந்தையை விலைக்கு வாங்கியது சூலூர் திம்மநாயக்கன் பாளையத்தை சேர்ந்த விவசாயி விஜயன் என்பது தெரியவந்தது.

இதையடுத்து போலீசார் அவரை கைது செய்தனர்.

அவரிடம் நடத்திய விசாரணையில், தங்களுக்கு குழந்தை இல்லை என்பதை தெரிந்து கொண்ட மகேஷ்குமார் ஆசை வார்த்தை கூறி சட்டப்படியான குழந்தையை பெற்று தருவதாக கூறினார். ஆனால் அவர் போலியான ஆவணங்களை கொடுத்து எங்களிடம் ஏமாற்றி குழந்தையை ரூ.2.50 லட்சத்துக்கு விற்று விட்டார் என போலீசாரிடம் தெரிவித்துள்ளார். பின்னர் விஜயனை கோர்ட்டில் ஆஜர்படுத்தி ஜெயிலில் அடைத்தனர்.

# கனவு பலிக்காததால் அண்ணாமலை விமர்சிக்கிறார் எடப்பாடி பழனிசாமி



சேலம், ஜூன் 9

சேலம் ஓமலூரில் உள்ள கட்சி அலுவலகத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இன்று நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர்கூறியதாவது:

2024 பாராளுமன்ற தேர்தல் நடைபெற்று முடிந்து இருக்கிறது. இந்த தேர்தல் குறித்து எதிர்க்கட்சியை சேர்ந்தவர்கள் பல விமர்சனத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த தருணத்தில் உங்களை நான் சந்தித்து பேசுகிறேன்.

தேர்தல் பிரசாரத்தை பொறுத்தவரைக்கும் அ.தி.மு.க.வை சேர்ந்த நான் ஒருவர் மட்டும் தான் தமிழகம் முழுவதும் அ.தி.மு.க. வேட்பாளர்களையும், கூட்டணி கட்சி வேட்பாளர்களையும் ஆதரித்து பிரசாரம் செய்தேன். அதுபோல் தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் ஆதரித்து பிரசாரம் செய்தார்.

அ.தி.மு.க. கூட்டணி பலம், தி.மு.க கூட்டணி பலத்தில் போட்டியிடுகிறது என விமர்சனம் செய்கிறார்கள். அ.தி.மு.க. இந்த தேர்தலில் 2019 பாராளுமன்ற தேர்தலில் பெற்ற வாக்குகளை விட 1 சதவீத வாக்குகள் கூடுதலாக பெற்றி இருக்கிறோம். இது அ.தி.மு.க.வுக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியாக பார்க்கிறேன்.

அ.தி.மு.க. ஓட்டுக்கள் எதிர்கட்சிக்கு சென்று விட்டது என சொல்கிறார்கள். அ.தி.மு.க. ஓட்டு எங்கும் போகவில்லை. எங்களுக்கு குதான் தான் கிடைத்து இருக்கிறது. இந்த தேர்தலில் அ.தி.மு.க. தான் கூடுதல் வாக்குகள் பெற்று இருக்கிறது. 2026 சட்டமன்ற தேர்தலில் அமோக வாக்குகள் பெற்று ஆட்சி அமைக்கும்.

கேள்வி: அ.தி.மு.க.வுக்கு ஒரு சில தொகுதிகளில் டெபாசிட் கிடைக்கவில்லையே?

பதில்: ஒரு சில தொகுதிகளில் பின்னடைவை சந்தித்து இருக்கிறது. அவை கொஞ்சம் காலத்தில் சரி செய்யப்படும்.

கே: பா.ஜ.க. கூட்டணி இருந்திருந்தால் வெற்றி கிடைத்து இருக்குமா?

ப: கூட்டணி இருந்திருந்தால், போயிருந்தால், அதை பற்றி எல்லாம் கவலை இல்லை. 2014, 2019, 2024ல் கூட்டணி மாறி மாறி அமைப்பாங்க. அந்தந்த தேர்தலில் சூழ்நிலைக்கு ஏற்றவாறு கட்சி கூட்டணி அமையும். 1992 ல் தி.மு.க. 2 இடங்களில் வெற்றி பெற்றது. 1996ல் அ.தி.மு.க. 4 இடங்களில் வெற்றி பெற்றது. ஆகவே தி.மு.க. அழிந்து போச்சா, அ.தி.மு.க. அழிந்து போச்சா அதெல்லாம் கிடையாது. தி.மு.க. கடந்த காலங்களில் ஒரு இடங்களில் கூட வெற்றி பெறவில்லை. எனவே மாறி மாறி தான் ஆட்சிக்கு வருவார்கள்.

ஆகவே அ.தி.மு.க.வுக்கு பின்னடைவு என்பது திட்டமிட்டு பரப்புகின்ற ஒரு பொய்யான செய்தி.

கே: சசிகலா, டி.டி.வி.தினகரன் ஆகியோரை கூட்டணிக்கு சேர்த்து இருந்தால்?

ப: இதற்கு மேல் அதை பற்றி பேசி என்ன பிரயோசனம். அரசியலில் வேண்டும் என்று திட்டமிட்டு எல்லோரும் சேர்ந்து ஒரு குழப்பத்தை விளைவித்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் பிரிந்து போன பிறகு தான் 1 சதவீதம் ஓட்டுகள் கூடுதலாக கிடைத்து இருக்கிறது.

கே: இனிவரும் காலங்களில் அ.தி.மு.க செயல்பாடு?

ப: இந்த தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பை தலைவணங்கி ஏற்றுக் கொள்கிறேன். வருகிற 2026 சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. அமோக வாக்குகள் பெற்று ஆட்சி அமைக்கும்.

தி.மு.க. அமைச்சர்ரகுபதிக்கும்அ.தி.மு.க.வுக்கும் என்ன சம்பந்தம். அ.தி.மு.க.வை பற்றி பேச அவருக்கு அருகதை கிடையாது. அவர் அ.தி.மு.க. வேட்டியை மாற்றி கட்டி போனவர். அவரை அடையாளம் காட்டிய கட்சி அ.தி.மு.க., வேண்டும் என்றே திட்டமிட்டு அவர் அ.தி.மு.க. பற்றி பேசுகிறார்.

அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து பா.ஜ.க. கூட்டணி விலகி விட்டது. அண்ணாமலையின் கனவு இந்த தேர்தலில் நனவாகவில்லை. அந்த விரக்தியில் அவர் பேசுகிறார். பா.ஜ.க.வுக்கு தனிப்பெரும்பான்மை கிடைக்காததற்கு தமிழ்நாட்டில் அந்த கட்சியில் உள்ள தலைவர்களை போல் பல தலைவர்கள் இருப்பார்கள். அதனால் தான் அந்த கட்சிக்கு பின்னடைவு ஏற்பட்டு இருக்கிறது.

நான் முதலமைச்சரான போது என்னென்னவோ தகவல்கள் வந்தது. மூன்று மாதம் இருப்பாரா, நான்கு மாதம் இருப்பாரா என்றனர். ஆனால் நான்காண்டு ரெண்டு மாதம் சிறப்பான ஆட்சி தந்தோம். பிறகு கட்சி இரண்டாகும் என அவதூறு பிரசாரம் செய்தனர். அ.தி.மு.க. தலைவர் காலத்திலும் சரி, அம்மா காலத்திலும்சரிதொடர்ந்து தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைத்து வந்தோம். வெற்றி வரும் வரை பயன்படுத்திக் கொள்கிறார்கள். வெற்றி பெற்ற பின்னர் தமது கத்தை மறந்து விடுகிறார்கள். இந்த நிலை மாற வேண்டும் என பதால்தான் தனித்துப் போட்டியிட்டோம்.

ஆட்சி அதிகாரம் வேண்டுமென்றால் தேசிய கட்சியுடன் நாங்கள் சேர்ந்து இருப்போம். தமிழ்நாட்டு உரிமையை காக்க வேண்டும். தமிழ்நாட்டு உரிமை காக்கவும் உரிமைகள் பறி போகும்போது தடுக்கவும் பாராளுமன்றத்தில் சுதந்திரமாக செயல்படவும் அ.தி.மு.க. இந்த முடிவை எடுத்தது.

தி.மு.க. கூட்டணி என்ன சாதிப்பார்கள் என பார்க்கத்தானே போகிறோம். பிரதமர் பதவியேற்பு விழாவிற்கு செல்வீர்களாஎன்றுகேட்டதற்கு அதை பற்றி இன்னும் சிந்திக்கவில்லை என்றார்.

தொடர்ந்து ஜெயக்குமார் பாரதிய ஜனதா கட்சியுடன் கூட்டணி சேராது எனக் கூறியிருக்கிறாரே என்ற கேள்விக்கு, (கூட்டணியில் சேராதென ஏற்கனவே தான் பேட்டி அளித்த வீடியோவை எடப்பாடி பழனிசாமி காண்பித்தார்) முன்பே நாங்கள் இது குறித்து தெரிவித்துவிட்டோம். அது பற்றி தான் ஜெயக்குமார் பேட்டியில் தெரிவித்து இருக்கிறார், என்றார்.

தொடர்ந்து நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் அ.தி.மு.க.வுக்கு வாக்களித்த வாக்காளர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். எங்களது வேட்பாளர்களுக்கு உழைத்த அனைத்து நிர்வாகிகளுக்கும், கட்சி தொண்டர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் நேரத்தில் எங்களுடன்கூட்டணிஅமைத்த அந்த கூட்டணி வேட்பாளர்களுக்கும் வாக்களித்த பொதுமக்களுக்கும் கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தே.மு.தி.க. மறு வாக்குப்பதிவு நடத்த வேண்டும் என கூறி உள்ளனரே என்ற கேள்விக்கு, மறு வாக்குப் பதிவு நடத்த வேண்டும் என கேட்டு இருக்கிறார்கள். நீதிமன்றத்துக்கு செல்ல உள்ளதாகவும் தெரிவித்திருக்கிறார்கள் என்றார்.

பின்னர் அ.தி.மு.க. நிர்வாகிகள் பா.ஜ.க.வுக்கு ஆதரவு தந்ததாக கூறுகிறார்கள் என்று கேட்டதற்கு, அப்படி இல்லை அப்படி இருந்தால் எப்படி ஒரு சதவிதம் வாக்கு அதிகரித்திருக்கும். இந்த தேர்தலில் ஒரு சதவீதம் கூடுதலாகஅ.தி.மு.க.வாக்குகள் பெற்றிருக்கிறது அவதூறு பிரசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறோம்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறினார்.

# கோவையில் இருந்து சென்னை செல்லும் ரெயில்களில் அலைமோதும் பயணிகள் கூட்டம்

கோவை, ஜூன் 9

கோவை சந்திப்பு ரெயில் நிலையத்தில் இருந்து சென்னைக்கு தினமும் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரெயில், நீலகிரி எக்ஸ்பிரஸ், இண்டர்சிட்டி எக்ஸ்பிரஸ், சேரன் எக்ஸ்பிரஸ் உள்பட 8 ரெயில்கள், வாரந்தோறும் 11 ரெயில்கள் என 20 ரெயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

இதேபோல் கோவையில் இருந்து நாகர்கோவிலுக்கும் தினந்தோறும் எக்ஸ்பிரஸ் ரெயில் இயக்கப்பட்டு வருகிறது.

கோவையில் இருந்து சென்னை, நாகர்கோவில் செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில்கள் மற்றும் கேரளாவில் இருந்து கோவை வந்து சென்னைக்கு செல்லக்கூடிய ரெயில்களில் எப்போதுமே கூட்டம் அலைமோதும். கோடை விடுமுறையையொட்டி சென்னை உள்பட வெளி மாவட்டங்களில் இருந்து அதிகமானோர் தங்கள் விடுமுறையை கழிப்பதற்காக கோவையில் உள்ள தங்கள் உறவினர் வீடுகளுக்கு வந்திருந்தனர்.

தற்போது கோடைவிடுமுறை முடிந்து நாளை மறுநாள் பள்ளிகள் திறக்கப்பட உள்ளன. இதனால் தங்கள் உறவினர்களின்வீடுகளுக்கு வந்தவர்கள், சொந்த ஊருக்கு செல்ல தொடங்கி உள்ளனர்.

இதன் காரணமாக கோவையில் இருந்து இயக்கப்படும் அனைத்து ரெயில்கள் மற்றும் பஸ்களில் கூட்டம் அலைமோதுகிறது. அதுவும் குறிப்பாக ரெயில்களில் பயணிகளின் கூட்டம் அலைமோதுகிறது.

கோவையில் இருந்து சென்னைக்கு செல்லக்கூடிய சேரன் எக்ஸ்பிரஸ், நீலகிரி எக்ஸ்பிரஸ், இன்டர்சிட்டிஎக்ஸ்பிரஸ்உள்ளிட்ட அனைத்து ரெயில்களிலும் பயணிகள் குடும்பம், குடும்பமாக பயணிக்கின்றனர்.

சேரன் எக்ஸ்பிரஸ், நீலகிரி எக்ஸ்பிரஸ் போன்ற 10 க்கும் மேற்பட்ட ரெயில்களில் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய வார இறுதி நாட்களில் முன்பதிவு டிக்கெட் பெறுவதற்கு 20 நாட்களுக்கு முன்பே முன்பதிவு செய்ய வேண்டும். அப்படி செய்தால் தான் டிக்கெட் கிடைக்கும்.

அதன்படி சிலர், முன்பதிவு செய்து ரெயிலில் பயணம் செய்கின்றனர். டிக்கெட் கிடைக்காதவர்கள் முன்பதிவில்லா பெட்டியில் பயணிக்கின்றனர்.

முன்பதிவில்லா பெட்டிகளில் வழக்கத்தை விட கூட்டம் அதிகமாக உள்ளது. ரெயிலில் உள்ள இருக்கைகள் முழுவதும் பயணிகள் கூட்டம் நிரம்பி வழிகிறது.

கோவையில் இருந்து நேற்று இரவு நாகர்கோவிலுக்கு எக்ஸ்பிரஸ் ரெயில் புறப்பட்டது. இந்த ரெயிலில் வழக்கத்தை விட பயணிகள் கூட்டம் அலைமோதியது. அதுவும் முன்பதிவில்லா பெட்டியில் பயணிகள் போட்டி போட்டு கொண்டு இருக்கையை பிடிக்க ஓடினர். பயணிகள் கூட்டம் காரணமாக முன்பதிவில்லா பெட்டிகள் அனைத்தும் நிரம்பி வழிந்தது.

ரெயிலில் உள்ள கழிவறைகள் அருகில் இருக்கைகள் நிரம்பியதால் பலர் மேலே உள்ள இருக்கைகளிலும், நடந்து செல்லும் பாதைகளிலும் அமர்ந்து கொண்டனர். இன்னும் பலர் நின்று கொண்டும் பயணித்தனர். இதனை பார்க்க முடிந்தது. ஒரு இடத்தில் ஒரு மற்றொரு இடத்திற்கு நகர முடியாத படி அனைத்து இடங்களிலும் பயணிகள் அமர்ந்து கொண்டு பயணம் செய்தனர். நிற்க கூட இடம் இல்லாமல் பயணிகள் தவித்தனர்.

இதற்கிடையே கோவையில் இருந்து சென்னைக்கு செல்லும்அனைத்து ரெயில்களிலும் முன்பதிவு டிக்கெட்டுகள் முடிந்து விட்டது. சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காத்திருப்பு பட்டியலில் 150க்கும் மேற்பட்டவர்கள் இருக்கின்றனர். மேலும் தட்கல் டிக்கெட் திறந்த ஒரு சில மணி நேரங்களில் முடிந்து விட்டது.

இதையடுத்து சூழ்நிலைகளுடன்பலர்முன்பதிவு இல்லாத ரெயில் பெட்டிகளில் பயணம் செய்தனர். இன்றும், நாளையும் இன்னும் அதிகளவிலான பயணிகள் ரெயில் மூலம் பயணம் செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் பலர் 10ந் தேதிக்கு பிறகு சொந்த ஊர் செல்ல திட்டமிட்டுள்ளனர்.

சொந்த ஊர் செல்ல பலர் இருப்பதால் கோவையில் இருந்து சென்னைக்கு சிறப்பு ரெயில்கள் இயக்க வேண்டும் அல்லது முன்பதிவு இல்லாத ரெயிலை இயக்க வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# 4வது நாளாக குட்டி யானையை தாயுடன் சேர்க்கப் போராடும் வனத்துறை

கோவை, ஜூன் 9

கோவை மருதமலை வனப்பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன்பு உடல் நலம் பாதிக்கப்பட்டு ஒரு பெண் யானை கிடந்தது. அதன் அருகே ஆண் குட்டி யானை ஒன்றும் இருந்தது. வனத்துறையினர் பெண் யானைக்கு சிகிச்சை அளித்து வனப்பகுதிக்குள் அனுப்பினர். அதற்கு முன்னதாகவே அதன் குட்டி யானைகாட்டுக்குள்சென்று விட்டது.

இந்தநிலையில் குட்டி யானை, தாயுடன் சேராமல் தனியாக பிரிந்து வந்து விட்டது. விராலியூர் அருகே தனியார் தோட்டத்தில் பரிதவிப்புடன் நின்ற குட்டி யானையை வனத்துறையினர் மீட்டு அதனை அதன் தாயுடன் சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அட்டுக்கல் வனப்பகுதியில் தாய் யானையுடன் குட்டியை வனத்துறையினர் சேர்க்க முயன்றபோது, தாய் யானை குட்டியை நிராகரித்து விட்டு ஓடிச் சென்றது. இதனையடுத்து குட்டியை சேர்க்கும் பணி தோல்வி அடைந்தது. பின்னர் குட்டி யானையை வாகனம் மூலம் மருதமலை யானை மடுவு வனப்பகுதிக்கு வனத்துறையினர் கொண்டு சென்றனர். அங்கு வேறு காட்டு யானைகள் கூட்டத்துடன் அதனை சேர்க்க முயன்றனர். ஆனால் அந்த யானைகள் குட்டியை தங்களுடன் சேர்க்காமல் விரட்டி விட்டது. இதனால் குட்டி யானையை மருதமலை வனத்துறையினர் குடியிருப்பு பகுதிக்கு கொண்டு சென்றனர். குட்டி யானை வனத்துறையினரிடமும், பொதுமக்களிடமும் நன்கு பழகி விட்டது. யானைக்கு பழம் கொடுப்பது, உணவு கொடுப்பது போன்ற செயல்களில் பொதுமக்கள் ஈடுபடுகிறார்கள். மக்களுடன் பழகக்கூடாது விட்டால்தான்குட்டியானையை காட்டு யானைகள் ஏற்க மறுப்பதாககூறப்படுகிறது.

குட்டி யானையை அதன் தாயுடன் சேர்க்கும் பணி இன்று 4வது நாளாக நடைபெற உள்ளது. இன்றைய முயற்சியில் தோல்வி அடைந்தால் குட்டி யானையை டாப்சிலிப் யானைகள் முகாமுக்கு கொண்டு சென்று பராமரிக்கலாம் என வனத்துறையினர் முடிவு செய்துள்ளனர். இதுதொடர்பாக வனத்துறை அதிகாரிகள் ஆலோசித்து வருகிறார்கள்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023
9.4.2024

# 'தாயே தாயே மகளென வந்தாய்' மகாராஜா படத்தின் பாடல் வெளியானது




விஜய் சேதுபதியின் 50 வது படமாக 'மகாராஜா' படம் உருவாகியுள்ளது. குரங்கு பொம்மை படத்தை இயக்கிய நிதிலன் சாமிநாதன் இப்படத்தை இயக்குகிறார். இப்படத்தை சுதன் சுந்தரம் மற்றும் ஜெகதீஷ் பழனிச்சாமி இணைந்து தயாரிக்கின்றனர்.

இப்படத்தில் அனுராக் காஷ்யப், மம்தா மோகன்தாஸ், நட்டி, முனிஷ் காந்த், சிங்கம் புலி, பாரதிராஜா, வினோத் சாகர், பி.எல்.தேனப்பன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த படத்துக்கு அஜனீஷ் லோக்நாத் இசையமைக்கிறார்.

இந்த படத்தின் 'பர்ஸ்ட் லுக்' போஸ்டர், சில மாதங்களுக்கு முன் வெளியானது. அதில் இதுவரை கண்டிராத அவதாரத்தில் விஜய் சேதுபதியின் தோற்றம் அமைந்திருந்தது.

சில நாட்களுக்கு முன் படத்தின் டிரைலர் வெளியாகிய மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. விஜய் சேதுபதி ஒரு சலூன் கடையை வைத்துள்ளார். வீட்டில் உள்ள லட்சுமி காணாமல் போனது என்று போலிஸ் ஸ்டேஷனில் புகார் அளிக்கிறார். அந்த லட்சுமி யார் என போலிஸ் விசாரிக்கிறது. யார் அந்த லட்சுமி என்பதை மர்மமாகவே வைத்திருக்கின்றனர். டிரைலர் மிகவும் சஸ்பன்சோடு அமைந்திருக்கிறது.

படம் வரும் ஜூன் 14 ஆம் தேதி வெளியாகவுள்ளது. தற்பொழுது படத்தின் முதல் பாடலான 'தாயே தாயே' என்ற பாடலின் லிரிக்கல் வீடியோ வெளியாகியுள்ளது. இப்பாடலை பிரபல பின்னணி பாடகரான சித் ஸ்ரீராம் பாடியுள்ளார். பாடல் வரிகளை வைரமுத்து எழுதியுள்ளார். இப்பாடலின் காட்சிகள் தற்பொழுதுசமூக வலைத்தளங்கலில் வைரலாகி வருகிறது.

# விவாகரத்தை அறிவித்த நட்சத்திர ஜோடி.. சோகத்தில் மூழ்கிய ரசிகர்கள்



கன்னட பிக் பாஸ் டைட்டில் வின்னரும் நடிகருமான சந்தன் செட்டியும் அவரது மனைவி நிவேதிதா கௌடாவும் விவாகரத்து பெற்று பிரிய உள்ளதாக அறிவித்துள்ளனர். கன்னட பிக் பாஸ் சீசன் சந்தன்5 இல் போட்டியாளராக பங்கேற்ற சந்தன் செட்டிக்கும் நிவேதவாவுக்கும் இடையில் காதல் மலர்ந்தது. கடந்த 2020 ஆம் ஆண்டு அவர்கள் திருமணம் செய்து கொண்டனர். சாந்தன் செட்டி மட்டுமின்றி இசையமைப்பாளர், பாடலாசிரியர், பாடகர் என்ற பன்முகத்தன்மையோடு கன்னட சினிமாவில் இயங்கி வருபவர்.

இந்நிலையில் நட்சத்திர ஜோடியான இவர்கள் பெங்களூரு குடும்ப நீதிமன்றத்தில் அவர்கள் விவாகரத்து தாக்கல் செய்துள்ளனர். இந்த செய்தியை நிவேதா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அறிவித்துள்ளார். அவரது பதிவில், இந்த நாள், நானும் சந்தன் செட்டியும் நல்ல புரிதலொரு ஒருமனதாக எங்களது திருமணத்தை சட்டரீதியாக முறித்துக்கொள்ள முடிவெடுத்துள்ளோம்.

ஊடகங்கள், நண்பர்கள் மற்றும் ரசிகர்கள் எங்களது முடிவுக்குக்கும் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் மதிப்பளிப்பீர்கள் என்று நம்புகிறோம். நாங்கள் இருவரும் வெவ்வேறு திசைகளில் சென்றாலும் இருவரும் ஒருவர் மீது ஒருவர் அக்கறையோடுதான் இருப்போம். உங்களின் ஆதரவு எங்களை இந்த இக்கட்டான காலகட்டத்தை கடக்க உதவி செய்யும். நன்றி என்று தெரிவித்துள்ளார்.

சமீப காலமாக தென்னிந்திய சினிமாவின் நட்சத்திர ஜோடிகள் விவாகரத்து செய்துகொள்வது தொடர்கதையாகி வருகிறது. தனுஷ் ஐஸ்வர்யா ரஜினிகாந்த், நாக சைதன்யா சமந்தா ஜி.வி. பிரகாஷ் சைந்தவி என இந்த பாட்டியல் நீளும்.

# செல்லப் பூனையுடன் ரெட் லைட் தெரபி எடுத்துக்கொண்ட சமந்தா.. வைரல் வீடியோ



தென்னிந்தியாவின் முன்னணி நடிகை சமந்தாமயோசிடிஸ்எனப்படும்தசைஅழற்சி நோயால் பாதிக்கப்பட்டு வெகு நாட்களாக அதற்கு சிகிச்சை பெற்று வருகிறார். தெலுங்கு நடிகர் நாக சைதன்யாவை விவாகரத்து செய்த பிறகு அங்கொன்றும் இங்கொன்றுமாக படங்களில் நடித்து வரும் சமந்தா கடைசியாக விஜய் தேவரகொண்டாவுக்கு ஜோடியாக குஷி படத்தில் நடித்திருந்தார்.

இதற்கிடையில் தனது மருத்துவ ஆலோசகருடன் உடல் சார்ந்த பல்வேறு விஷயங்களைக் குறித்து உரையாடல் நடத்தி அதை பாட்காஷ்டாக வெளியிட்டு வருகிறார். அந்த பாட்காஷ்டில் சொல்லப்படும் மருத்துவ குறிப்புக்கள் தவறானவை என்று சமீபத்தில் சர்ச்சையும் எழுந்து அடங்கியது.

இந்நிலையில் சருமத்தில் அதிக பாதிப்புகளை ஏற்படுத்தும் தனது மயோசிடிஸ் நோயை குணப்படுத்த வெளிநாடுகளில் பல்வேறு தெரபிகளை எடுத்து வரும் சமந்தா, தற்போது ரெட் லைட் தெரபி சிகிச்சை பெற்றுள்ளார். இந்த தெரபி மூலம் சருமத்தில் உள்ள திசுக்களை புதுப்பிக்க முடியும் என்று கூறப்படுகிறது.

இந்த தெரபியை தனது பூனையுடன் சேர்ந்து சமந்தா எடுத்துக்கொண்ட வீடியோவை அவர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்து 'ரெட் லைட் தெரபி டேட் ' என தனது பூனையுடன் சென்ற டேட்டிங் என்ற அர்த்தத்தில் பதிவிட்டுள்ளார்.

# பேரன்பும் பெருநன்றியும் சூரியின் நெகிழ்ச்சி பதிவு




கடந்த மே 31 ஆம் தேதி துரை செந்தில்குமார் இயக்கத்தில் சூரி, சசிகுமார் , உன்னி முகுந்தன் , மைம் கோபி உள்ளிட்ட பலர் நடிப்பில்வெளியானதிரைப்படம் கருடன். இப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ளார்.

கடந்த ஆண்டு வெற்றிமாறன் இயக்கத்தில் வெளிவந்த விடுதலை திரைப்படத்தில் கதாநாயகனாக நடித்து மக்கள் மனதை வென்றார்சூரி.அதைத்தொடர்ந்து கதாநாயகனாக கருடன் திரைப்படத்தில் நடித்துள்ளார். படம் வெளியாகிய நாளிலிருந்தே மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றது. வசூல் ரீதியாக 27 கோடி ரூபாயை கடந்துள்ளது என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இப்படம் கிராமப்புற உள்ள மக்களால் மிகவும் விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது. படத்தின் வெற்றியை முன்னிட்டு இன்று படத்தின் இசையமைப்பாளருக்கும், ஒளிப்பதிவாலருக்கும் மாலை அணிவித்து நன்றி தெரிவித்தனர். தற்பொழுது மக்களுக்கு நன்றி தெரிவித்து சூரி வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார் சூரி.

# விராட் கோலி ரோகித் சர்மாவின் அரிய சாதனையை சமன் செய்த ஆப்கானிஸ்தான் வீரர்கள்



டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் வெஸ்ட் இண்டீஸ் மற்றும் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரின் முதல் போட்டியில் ஆப்கானிஸ்தான் உகாண்டாவை எதிர்கொண்டு அபார வெற்றி பெற்றது. இந்த போட்டியின்போது ஆப்கானிஸ்தான் வீரர்கள் குர்பாஸ் மற்றும் இப்ராஹிம் சேர்ந்து 100 ரன்கள் குவித்தது.

இன்று நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் இந்த ஜோடி அபாரமாகவிளையாடியது. முதல்விக்கெட்டுக்கு 103 ரன்கள் குவித்தது. குர்பாஸ் 80 ரன்களும், இப்ராஹிம் ஜத்ரன் 44 ரன்களும் விளாசினர்.

இதன்மூலம் டி20 உலகக் கோப்பையில் அடுத்தடுத்து இந்த ஜோடிகள் 100 ரன்கள் குவித்தது. இதற்கு முன்னதாக விராட் கோலி ரோகித் சர்மா ஜோடி இந்த சாதனையை படைத்துள்ளது. இதன்மூலம் குர்பாஸ் இப்ராஹிம் ஜோடி விராட் கோலி ரோகித் சர்மா ஜோடியின் சாதனையை சமன் செய்துள்ளது.

பாபர் அசாம் முகமது ரிஸ்வான் ஜோடி 3 முறை 100 ரன்களை கடந்துள்ளது. கில்கிறிஸ்ட் ஹெய்டன் ஜோடி 2 முறையும், அலேக்ஸ் ஹேல்ஸ்மோர்கன் ஜோடி இரண்டு முறையும், ஜெயவர்தனே சங்கக்காரா, டேவிட் வார்னர் வாட்சன் ஜோடிகள் இரண்டு முறையும் 100 ரன்கள் அடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# இந்தியா, பாகிஸ்தானுக்கு முன்னுரிமை: ஐசிசி மீது இலங்கை மந்திரி குற்றச்சாட்டு



டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் வெஸ்ட் இண்டீஸ் மற்றும் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில் 20 அணிகள் பங்கேற்று விளையாடி வருகின்றன. டி20 தொடர் தொடங்கியதில் இருந்து மோசமான ஆடுகளம், இந்தியாவில் உள்ள ரசிகர்கள் போட்டியை பார்ப்பதற்கு வசதியான வகையில் போட்டி அட்டவணை, மோசமான வசதி என பல புகார்கள் அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் இந்தியா, பாகிஸ்தான் போன்ற அணிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதாக இலங்கையின் விளையாட்டுத்துறை மந்திரி ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கை அணிக்கு நியாயமான முறையில் போட்டி அட்டவணை தயாரிக்கப்படவில்லை என குற்றம் சாட்டியதுதான் இதற்கு காரணம். குரூப் ஸ்டேஜ் போட்டிகளில் விளையாட இலங்கை அணி நான்கு இடங்களுக்கு செல்ல வேண்டியுள்ளது. இது மட்டும் போதாத நிலையில், வங்காளதேச அணிக்கெதிராக விளையாட தல்லாஸ் செல்லும்போது ஏழு மணி நேரம் தாமதம் ஏற்பட்டுள்ளது.

"இது தொடர்பாக ஐசிசிக்கு புகார் அளித்துள்ளோம். ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு மாதிரியாக முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. இது தொடர்பாக விளக்கம் அளிக்க வேண்டும் என ஐசிசியிடம் கேட்டுள்ளோம்" என பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒட்டல், தற்போது போட்டி நடத்தப்படும் இடத்திற்கு அருகில் மாற்றப்பட்டுள்ளது. அதேவேளையில் இந்தியா நான்கு போட்டிகளில் முதல் மூன்று போட்டிகளை ஒரே மைதானத்தில் விளையாடுகிறது என மற்ற அணிகள் குற்றம்சாட்டுகின்றன.

# எங்களின் நெக்ஸ்ட் டார்கெட் இந்தியாதான்: மார் தட்டும் அமெரிக்க வீரர்



டி20 உலகக் கோப்பை தொடரில் நேற்று நடைபெற்ற போட்டியில் பாகிஸ்தான் மற்றும் அமெரிக்கா அணிகள் மோதின. பரபரப்பாக நடைபெற்ற இந்த போட்டி சூப்பர் ஓவர் வரை சென்றது. சூப்பர் ஓவரில் பாகிஸ்தான் அணியை வீழ்த்திய அமெரிக்கா வரலாற்று சாதனையை பதிவு செய்தது.

இந்நிலையில், அமெரிக்க வேகப்பந்து வீச்சாளர் அலி கான் செய்தியாளர்களிடம் பேசியதாவது:

பாகிஸ்தானுக்கு எதிராக நாங்கள் பெற்ற மாபெரும் வெற்றி. இந்த நிலைக்காக நாங்கள் நீண்ட காலமாக காத்திருந்தோம். இந்த வாய்ப்பை நாங்கள் இரு கைகளாலும் பிடிக்க முயற்சிக்கிறோம். சூப்பர் 8 சுற்றுக்கு தகுதி பெறுவதே எங்கள் வேலை என்பதால் இன்னும் வேலை முடிந்துவிட்டதாக நான் நினைக்கவில்லை. எனவே அணி உண்மையிலேயே நம்பிக்கையுடன் உள்ளது. நாங்கள் இந்த வேகத்தை தக்கவைத்துக் கொள்வோம். இந்தியா மற்றும் அயர்லாந்துக்கு எதிராக வெற்றி பெறுவதே எங்களின் அடுத்த இலக்கு என தெரிவித்தார்.

# இந்தோனேசிய ஓபன் பேட்மிண்டன்: லக்ஷயா சென் காலிறுதியில் தோல்வி



இந்தோனேசிய ஓபன் பேட்மிண்டன் தொடர் ஜகார்த்தாவில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி சுற்றில் இந்தியாவின்லக்ஷயாசென், டென்மார்க்வீரர்ஆண்டர்ஸ் அண்டோன்சென்னுடன் மோதினார்.

இதில் லக்ஷயா சென் 22–24, 18–21 என்ற செட் கணக்கில் தொடரில் இருந்து வெளியேறினார்.



**படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்**
**நடுவன்மை நாணு பவர்**

**விளக்கம்:**

நடுவுநிலைமை அல்லாதவற்றைக் கண்டு நாணி ஒதுங்குகின்றவர், பிறர் பொருளைக் கவர்வதால் வரும் பயனை விரும்பிப்பழியானசெயல்களைச்செய்யார்.

# முனிச் உலகக் கோப்பை துப்பாக்கிச்சுடுதல்: தங்கம், வெண்கலத்துடன் இந்தியா 4வது இடம்

ஜெர்மன் நாட்டின் முனிச் நகரில் உலக துப்பாக்கிச்சுடுதல் போட்டி நடைபெற்றது. இதில் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் இந்திய வீரர் சரபோத் சிங் தங்கம் வென்றார்.

50 மீட்டர் ரைபிள் 3 பொசிஸ்சன் பிரிவில் சிஃப்ட் கவுர் சம்ரா வெண்கல பதக்கம் வென்றார். இந்தியாவால் இரண்டு பதக்கங்கள்தான் வெல்ல முடிந்தது.

சீனா 4 தங்கம், 4 வெள்ளி, 3 வெண்கலத்துடன் 11 பதக்கங்கள் வென்று பதக்க பட்டியலில் முதல் இடம் பிடித்தது. நார்வே ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலத்துடன் 3 பதக்கங்கள் பெற்று 2வது இடம் பிடித்தது.

பிரான்ஸ் ஒரு தங்கம், ஒரு வெண்கலத்துடன் 3வது இடம் பிடித்தது. இந்தியா 1 தங்கம், ஒரு வெண்கலத்துடன் 4வது இடம் பிடித்துள்ளது.




**நமது தினகனி**
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
**94436 99066**
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.